**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திரு. கருப்பையா |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.08.2022**

**முதல் விசாரணை :**

நான் எழுமலையில் குடியிருந்து வருகிறேன். வேலாம்பூர் பிட்-2 ல் கிராம நிர்வாக அதிகாரியாக வேலை செய்கிறேன். நான் சம்பவ சமயத்தில் அத்திப்பட்டியில் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தேன். கடந்த 01.10.2016 ம் தேதி என்னுடன் பணிபுரியும் தலையாரி பாலு அவர்கள் அன்று காலை 07.00 மணிக்கு எனக்கு போன் செய்து, சுந்தரராஜபெருமாள் கோவிலுக்கு சொந்தமான சர்வே எண்.427 இடத்தில் ஒரு சடலம் இருப்பதாக சொன்னார். அவர் சொன்னதன் பேரில் அன்று காலை 08.00 மணியளவில் நானும், தலையாரி பாலுவும், ஊரில் உள்ள சிலரும் சம்பவ இடம் சென்று பார்த்தோம். ஒரு பெண்ணின் வலது கால் விரல் வெளிப்பகுதி தெரிந்தது. இடது கால் முட்டி பகுதி வெளியில் தெரிந்தது. உடல் முழுவதும் மண்ணில் புதைக்கப்பட்டு இருந்தது. அந்த பெண் சிவப்பு மற்றும் வைலட் நிற துணி லேசாக வெளியில் தெரிந்தது. அந்த ஆடையை வைத்து அது பெண்ணின் சடலம் என்று தெரிந்துகொண்டேன். அந்த இடம் சடங்களை புதைக்கும் இடம் கிடையாது. அது கோவிலுக்கு சொந்தமான இடம் ஆகும். புதைக்கப்பட்டிருந்த உடலானது தென்வடல் ஓடைக்கரையின் மணலை

அள்ளி மூடி அதன் மேல் முட்களை போட்டிருந்தார்கள். அந்த பெண்ணின் உடல் கிழமேலாக இருந்தது. இதன் தொடர்பாக தகவல் தெரிந்தவுடன் எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு, நான் சாப்டுர் காவல்நிலையத்தில் தகவல் சொன்னேன். புகாரினை எழுதி அதில் நான் தான் கையொப்பம் செய்தேன். **அந்த புகார் அதசாஆ.1 ஆகும்.** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சிவப்பு, வைலட் கலந்த ஆடை சம்பவ இடத்தில் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் தெரிந்த ஆடையாகும். **அந்த சிவப்பு வைலட் துணி அசாபொ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் 1,2,4 தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

<u>3 எதிரி தரப்பில் கு.வி.</u>

நான் வருவாய் துறை நிலை ஆணைகள் மற்றும் கிராம நிர்வாக அலுவல் சம்பந்தமாக விதிகள் படி நடப்பேன் என்றால் சரிதான். எனது அலுவல் சம்பந்தமாக வெளியில் செல்லும்போது Movement register, வருகை பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்த பிறகு செல்லவேண்டும் என்றால் வருகை பதிவேடு கிடையாது. உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு தான் வெளியில் செல்லுவேன். நான் கொடுக்கும், அறிக்கைகள், செய்திகள் அனைத்தையும் தாசில்தான் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவேண்டும். அராசாங்கத்திற்கோ, அரசிற்கோ, நீதிமன்றத்திற்கோ புகார் அனுப்பும்போது, எங்கள் அலுவலக முத்திரையும், அரசாங்க முத்திரையும் வைத்து எனது கையொப்பம் இட்டு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் அறிக்கை அல்லது தகவல்களின் பக்கங்கள் 5,6 பக்கங்களாக இருக்கும் பட்சத்தில் அனைத்து பகுதிகளிலும் நான் கையொப்பம் செய்ய அவசியம் இல்லை. கொடிய குற்றம் பற்றிய தகவல்

வந்திருந்தால் முறையான பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும். இந்த வழக்கு சம்பந்தமாக நான் அவ்வாறு பதிவு செய்யவில்லை. ஒரு கிராம நிர்வாக அலுவலர் பதவி காலியக இருக்கும் போதோ, அல்லது பொறுப்பு அதிகாரி யாரும் இருக்கும் பட்சத்தில் அந்த விபரம் தாசில்தான் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு பெரிய குற்றம் நடந்திருந்தால் அந்த தகவல் தெரியவரும்போது, அதை எவ்வாறு பதிவு செய்யவேண்டும் என்றும், எவ்வாறு பதிவு செய்யவேண்டும் என்ற விதிகள் உள்ளது. ஒரு குற்றம் சம்பந்தமாக புகார் கொடுத்தாலோ, அல்லது ஒருவர் குற்றம் சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தாலோ அந்த சம்பவ இடத்தை சென்று பார்வையிடவேண்டும் என்றும், குற்ற கிரைம் மெமோ தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். கிரைம் மெமோ எத்தனை நகல்கள் தயார் செய்ய வேண்டும் என்றால் எங்கள் அலுவலகத்திற்றும், தாசில்தார் அலுவலகத்திற்கு மட்டும் தான் தயார் செய்து வைத்துக்கொள்வோம். அந்த மெமோ நகல் நீதிமன்றத்திற்கும், காவல்நிலையத்திற்கும் கொடுக்க வேண்டும். இந்த வழக்கிலும் நான் அவ்வாறு 4 நகல்கள் எடுத்து அனுப்பியுள்ளேன். நான் சொன்னது போல் 4 நகல்கள் எடுத்து அனுப்பவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எந்தஒரு வேண்டுகோள் கடிதமும், முறையாக எழுத்து மூலமாக அலுவலக சீல் வைத்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். ஒரு பிரேதத்தை தோண்டி எடுக்கும் போது விதிமுறைகள் உள்ளது என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியும். தாசில்தார் முன்னிலையில் மட்டும பிரேதம் தோண்டி எடுக்க வேண்டும் என்பது மட்டுமே தெரியும். மற்ற விபரம் எதுவும் தெரியாது. இந்த வழக்கில் பிரேதத்தினை தோண்டி எடுக்கும்போது போட்டோ எடுத்தார்கள். யார் எடுத்தார்கள் என்று தெரியாது. எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்று தெரியாது. அந்த பிரேதத்தை நான் முழு உருவமாக பார்த்தேனா சிதைந்த நிலையில் பார்த்தேனா என்றால் முழுமையாகப் பார்த்தேன். சிதைந்த நிலையில் பார்க்கவில்லை. அழுகிய நிலையிலும் பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்த பிரேதம் 7,8 நாட்கள்

கழித்து பார்க்கும் போது அழுகிய நிலையிலும், சிதைந்த நிலையிலும் இருக்கும் என்றும் சொன்னால் இந்த வழக்கு பாதிக்கப்படும் என்று உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பிரேதத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போலிசார் தயார் செய்த புகாரில் கையொப்பம் செய்து போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பிரேதத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. உயிருள்ள மனிதனோ, அல்லது இறந்த பிரேத்தின் முட்டியோ, கால் விரல் வைத்து மட்டும் ஒரு பிரேதம் ஆணா பெண்ணா என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் நான் பார்த்த பிரேத்தில் இருந்த சுடிதார் ஆடைகளை வைத்து பெண் பிரேதம் என்று தெரிந்து கொண்டேன். நான் சொன்னது போல் பிரேதத்தின் மீது எந்த ஆடைகளும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் எனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிதான். எனக்கு தகவலை எனது தலையாரி சொல்லும்போது நான் எனது வீட்டில் இருந்தேன். எனது வீடு எழுமலையில் உள்ளது. எழுமலைக்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 15 கிமீ தூரம் இருக்கும். எனக்கு காலை 07.00 மணிக்கு தொலைபேசி மூலமாக எனது தலையாரி தகவல் சொன்னார். நான் 08.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் நான் செல்லும்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நான், தலையாரி மற்றும் 2,3 பொதுமக்கள் மட்டும் தான் இருந்தார்கள். அந்த பொது மக்கள் யார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அந்த 2,3 பொதுமக்களிடம் நான் விசாரணை செய்தேன். ஆனால் அவர்கள் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் தாசில்தார் மற்றும் வருவாய் ஆய்வாளருக்கு காலை சுமார் 07.30 மணிக்கு தகவல் சொன்னேன். 07.30 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு வரும் வழியிலேயே எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேன். சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலயம் சுமார் 4,5 கிமீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு நானும்,

எனது தலையாரியும் சென்றோம். காவல்நிலையத்தில் நாங்கள் சுமார் ஒரு மணி நேரம் இருந்தோம். சம்பவ இடத்தில் நான் சுமார் 1 மணி நேரம் இருந்தேன். காவல்நிலையத்தில் என்னை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தார். அதற்கு பிறகு இன்று தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். காவல்நிலையத்தில் இருந்து கிளம்பி நான் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று நடந்த விபரத்தை சொல்லி அறிக்கை தாக்கல் செய்த பிறகு மீண்டும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். மீண்டும் சம்பவ இடத்தில் அன்று சாயங்காலம் சுமார் 06.00 மணி வரை இருந்தேன். சடலத்தினை யார் தோண்டினார்கள் என்று எனக்குத் தெரியும். மருத்துவர்கள் தான் சடலத்தினை தோண்டி எடுத்தார்கள். சடலத்தினை தோண்டி எடுக்கும்போது போலிசார் அங்கு இருந்தார்கள். சம்பவ இடத்திற்கும் பழையூர் கிராமத்திற்கும் இடையே சுமார் 1 1/2 கிமீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து பேரையூர் காவல்நிலையம் சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். அசாபொ.1 ஐ நான் பார்த்ததாக புகாரில் நான் குறிப்பிடவில்லை. அதேபோல் எனது அலுவலக முத்திரையும் புகாரில் குறிப்பிடப்படவில்லை. புகாரில் எனது வயது, எனது அப்பா பெயர் போன்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. எனது தலையாரியிடம் போலிசார் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். எந்த ஆவணத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியாது. அன்றைய தினமே எனது தலையாரி சாட்சி கையொப்பம் செய்துவிட்டு என்னுடன் வந்துவிட்டார். சம்பவ இடத்தில் இருந்து கல்லணைமேடுபாறை என்ற இடம் சுமார் 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. சம்பவ இடத்தில் இருந்து கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியும். கிழக்கு பக்கம் மலை உள்ளது. மேற்கு பக்கம் புளியந்தோப்பு உள்ளது. அந்த புளியந்தோப்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்ற சர்வே எண், பட்டா எண் போன்ற விபரங்கள் தெரியாது. பிரேதம் புதைக்கப்பட்டிருந்த ஓடைக்கு என்ன பெயர் என்று தெரியாது. பிரேதம் தோண்டும்போது சுமார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 40 பேர் இருந்தார்கள். அந்த 40 பேரில் நான், போலிசார், மருத்துவர் குழு தவிர மற்ற நபர்கள் வேறு யார் யார் இருந்தார்கள்

என்று எனக்குத் தெரியாது. நான் தாசில்தாருக்கு உதவியாக கூடவே தான் இருந்தேன். தாசில்தார் எதுவும் அறிக்கை தயார் செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு விபரம் தெரியாது. தாசில்தார் சம்பவ இடத்தைவிட்டு செல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நானும், தாசில்தாரும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவ எதுவும் நடக்கவில்லை என்றாலும் போலிசாரின் பொய்யான வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த விதிமுறைகளையும் சரியாக பின்பற்றவில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை